# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.785/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/Pw3 |
| Name | : Aravind Rajkumar |
| Father/Husband's Name | : David Selvaraj |
| Village | : |
| Taluk | : Kandikai |
| Calling | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.09.2025.

**முதல் விசாரணை:**

நான் சூப்பர்வைசராக வேலை செய்கிறேன். கடந்த 13.09.2021ம் தேதி நான் பணிக்கு வந்து என்னுடைய அடையாள அட்டையை வருகை பதிவு செய்த போது, அது பதிவேட்டில் குறிப்பாகவில்லை. அதனால் Maintenance குழுவிடம் இதை பற்றி தெரிவித்த போது, அவர்கள் HR department யிடம் ஏற்கனவே இதை பற்றி தெரிவித்ததாக சொன்னார்கள். நாங்கள் அனைவரும் சிசிடிவி கேமரா footage பார்த்த போது, ஆஜர் எதிரி வருகை பதிவேட்டு Battery and Invertor யை trolly ல் வைத்து, வெளியே எடுத்து வந்து, LK Transport Reg No.TN 85 B 6085 என்ற வாகனத்தில் ஏற்றியதை நாங்கள் பார்த்தோம். அதன் பிறகு HR Department யை சேர்ந்த அம்பிகாபதி என்பவர் புகார் கொடுப்பதாக சொன்னார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

எங்கள் நிறுவனத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சுமார் 80 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் சுமார் 4 security நபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மெயின் கேட்டில் யார் வந்தாலும், சென்றாலும்

விசாரித்து சோதனை செய்து தான் அனுப்புவார்கள். எங்கள் நிறுவனத்தில் பொருட்களை ஏற்றி வரும் வாகனங்களையும் மற்றும் பொருட்களை இறக்கி வைத்துவிட்டு மீண்டும் ஏற்றி செல்லும் வாகனங்களையும் சோதனை செய்து தான் அனுப்புவார்கள் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் 3 ஷிப்ட்டாக 24 மணி நேரமும் பணியாட்கள் பணி செய்து கொண்டு இருப்பார்கள் என்றால் சரிதான். ஒரு பணியாளர் பணிக்கு வரும்பொழுதும் , போகும் போதும் பணியாட்கள் வருகை பதிவேட்டில் குறிப்பு வைத்து தான் செல்ல முடியும் என்றால் சரிதான். ஒப்பந்த அடிப்படையில் பொருட்கள் ஏற்றி செல்ல சுமார் 100 வாகனங்கள் வந்து செல்லும் என்றால் சரிதான். வாகனத்திலிருந்து உள்ளே வரும் பொருட்களுக்கு receiving store incharge மற்றும் வாகனத்திலிருந்து பொருளை ஏற்றி செல்லும் Despatch Store incharge இருக்கிறார்கள் என்றால் சரிதான். வாகனத்தில் பொருட்கள் நிறுவனத்திலிருந்து ஏற்றப்பட்டு, invoice மற்றும் ரசீது மூலமாக தான் வெளியில் செல்லும் என்றால் சரிதான். முதலில் Despatch Store ல் ஆய்வு செய்வார்கள். அதன் பிறகு, security receipts அடிப்படையில் ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். சம்பவ தேதியன்று ஆஜர் எதிரி பணிக்கு வந்தாரா என்பது குறித்து பணியாட்கள் வருகை பதிவேட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். சிசிடிவி பதிவை பார்த்தாலும், சம்பவ தேதியன்று சம்பவம் நடந்ததா என்பது குறித்து தெரிய வரும் என்றால் சரிதான். அருண்குமாரை விசாரித்தாலும், சம்பவ தேதியன்று காணாமல் போன பொருளை பற்றி அசா.1 யிடம் சொன்னாரா என்பது குறித்து தெரிய வரும் என்றால் சரிதான். 13.09.2021ம் தேதி அன்று, ஆஜர் எதிரி பணி வந்தார் என்றால் பணிக்கு வந்தார். நான் எதிரியுடன் சக பணியாளராக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். நான் நிரந்தர ஊழியராக ஆகிவிட்டேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி சுமார் 2 வருடங்களாக அந்த நிறுவனத்தில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். ஒரு பணியாளர் சுமார் 240 நாட்கள் பணியில் இருந்தால் நிரந்தர பணியாளராக மாற்ற வேண்டும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி 2 வருட காலமாக பணியில் இருந்ததால் நிரந்தர பணியாளராக மாற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் அவ்வாறு கோரிக்கை வைத்ததால் நடக்காத சம்பவத்தை நடந்தது போல பணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் சம்பவம் நடந்திருந்தால் சிசிடிவி பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றும், அவ்வாறு நடக்காத காரணத்தினால் தான் சிசிடிவி பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல், எங்கள் நிறுவனத்திலிருந்து

பொருட்கள் எதுவும் திருடு போகவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் Management staff என்றாலும், ஆஜர் எதிரி சாதாரண தொழிலாளி என்றாலும் சரிதான். Management staff கொடுத்த பொய்யான புகாரின் பேரில், அந்த நிறுவனத்தின் ஊழியர் என்ற முறையில் அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலீசார் விசாரணையில் சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். அவ்வாறு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், தற்போது முதல் முறையாக போலீசார் விசாரணையில் சொல்லாத விவரங்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.